**சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 03/2020

நாள்: 11.11.2025

பி.வா.சா. 2 – பிச்சபிள்ளை

2025–ம் ஆண்டு நவம்பர் 11–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கிருஷ்ணவேனி, கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கும் வாதிகள் குடும்பத்திற்கும் இடையே பேச்சுவார்த்தை உண்டு. வாதிகளுக்கு என்னுடைய வீட்டுக்கு பக்கத்திலும் நிலத்திற்கு பக்கத்திலும் இடம் உண்டு. வாதிகளின் சொத்திற்கு வடமேற்கு, தென்கிழக்கு ஆகிய பகுதிகளில் எனக்கு சொத்து உள்ளது. வடமேற்கில் உள்ள நிலத்திற்கு அதன் கீழ்புறம் உள்ள வாதியின் சொத்து வழியாக தான் செல்லவேண்டும் என்றால் இல்லை. என் சொத்திற்கு கீழ்புறம் உள்ள வாதியின் சொத்தின் சர்வே எண்.221/6. அந்த சொத்து தாவா சொத்திற்கு கட்டுப்பட்டதா என்றால் தெரியாது. எனக்கு மில்டன் என்ற மகன் உள்ளார். என் மகனுக்கு 5ம் வாதியான ரஞ்சிதாவை பெண் கேட்டோமா என்றால் இல்லை. இவ்வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துகள் உள்ளது என்றால் சுமார் 50 அயிட்ட சொத்துகள் உள்ளது. இவ்வழக்கில் கண்ட 20வது அயிட்ட சொத்து ஞாபகமில்லை. எதிருரை கோரிக்கையில் உள்ள 20வது அயிட்ட சொத்து தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.340, 342 ஆகிய சொத்துக்கள் 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். மேற்படி சர்வே எண்கள் எதிரிடை கோரிக்கையில் உள்ளதா என்றால் புரியவில்லை. எதிருரை கோரிக்கையில் உள்ள 15வது அயிட்ட சொத்து மனை ஆகும். அதன் சர்வே எண்.260/13, 14.

1ம் பிரதிவாதி 1ம் வாதி பெயரில் ஏற்கனவே அரியலூர் நீதிமன்றத்தில் பாக வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் செய்துள்ளாரா. அந்த சமயம் 1ம் பிரதிவாதியுடன் நான் உடன் இருந்து ஒத்துழைப்பு கொடுத்ததால் அதன் விவரம் எனக்கு தெரியும். இவ்வழக்கில் கண்ட சொத்துக்கள் தான் அந்த வழக்கிலும் போடப்பட்டுள்ளது. அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. இந்த வழக்கில் கண்ட சொத்துகளில் உள்ள ஆர்எஸ்பதி மரங்களை வெட்டுவது சம்மந்தமாக உயர்நீதிமன்றத்திற்கு 1ம் வாதி சென்றார் என்றால் சரிதான். ஆர்எஸ்பதி மரங்களை வெட்டி பிரித்து கொள்வது சம்மந்தமாக நீதிமன்ற ரிசீவர் நியமணம் செய்வதற்காக உயர் நீதிமன்றத்திற்கு சென்றார் என்றால் சரிதான். ஆர்எஸ்பதி மரங்களை ஆளுக்கு பாதியாக வெட்டி எடுத்துக்கொள்வது என்று முச்சலிக்கா 1ம்வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடைய ஏற்பட்டது என்றால் சரிதான். அப்போது நான் உடன் இருந்தேன் என்றாலும் அது 1995 ஏற்பட்டது என்றால் சரிதான். மரம் வெட்டுவது சம்மந்தமாக 1995–ல் பூரசாமி, ராமலிங்கம், தங்கவேல் மற்றும் நானும் சேர்ந்து பஞ்சாயத்து பேசி முடித்தோம். அதன் பின் பஞ்சாயத்து பேசினோமா என்றால் பேசினோம். நிலத்து பஞ்சாயத்து பேசினோம். எப்போது நிலத்திற்காக பஞ்சாயத்து பேசினோம் என்றால் 1996–ல் பேசினோம். தேதி, மாதம் ஞாபகமில்லை. மேற்சொன்ன பூரசாமி, ராமலிங்கம், தங்கவேல் மூவரும் நிலத்து பஞ்சாயத்திற்கு வரவில்லை. தற்போது பூரசாமி, ராமலிங்கம், தங்கவேல் மூவரும் உயிருடன் இல்லை. நான் சொல்வது போல் 1996ம் ஆண்டு 1ம் வாதி குடும்ப அசையா சொத்துக்களை பொறுத்து எந்தவித பஞ்சாயத்து, சமரச பேச்சு வார்த்தை நடக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு எதிரிடை கோரிக்கையில் கண்ட சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டதாக பொய்யாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எதிரிடைகோரிக்கையில் கண்ட 20 அயிட்ட சொத்துக்களை தனியாக

அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் கூறியுள்ள நானேராஜன் என்பவருக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகாமையில் நானேராஜன் என்பவருக்கு நிலம் உள்ளது. நானேராஜன் 1ம் பிரதிவாதிக்கு நெருங்கிய பழக்கம் என்றால் இல்லை. நானேராஜன் எதிரிடை கோரிக்கையில் கண்ட சொத்துகளுக்கு வாடகைக்கு தண்ணீர் விடுவதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள், எதிரிடை கோரிக்கையில் கண்ட சொத்துகள் இதுநாள் வரையில் பாகம் பிரியாத சொத்துகள் என்றால் சரியல்ல. 1991 ஆம் ஆண்டில் இருந்து நான் 1ம் பிரதிவாதிக்கு முன் வழக்கில் இருந்து ஒத்துழைப்பு தருவதாலும் என் நிலத்திற்கு கீழ்புறம் சொத்திற்கு பாதைகேட்டு வாதிகள் மறுத்த காரணத்தினாலும் 5ம் வாதியை என் மகனுக்கு பெண்கேட்டு கொடுக்க மறுத்த காரணத்தினாலும் உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு நான் அக்கறை உள்ள சாட்சி என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.